பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 183

வியாழக்கிழமை
29 மே 2025

வைகாசி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## தபால்த்துறையினர் பணிப்புறக்கணிப்பில்

கொழும்பு, மே 29
தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் 48 மணிநேர அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளது என்று தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஜி.ஜி. 11

ஒருங்கிணைப்புக் கூட்டத்தில்

## காற்றாலை மின்திட்டத்துக்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு!

மணல் அகழ்வுக்கும் கண்டனம் 11

கடலரிப்புக் காரணமாக

## வங்காலைக் கிராமமே அழிவடையும் ஆபத்தில்!

மன்னார் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில்
துரைராசா ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு




மன்னார், மே 29
மன்னார் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட வங்காலைப் பகுதியில் ஏற்பட்டுள்ள கடலரிப்புக் காரணமாக, வங்காலைக் கிராமமே காணாமற்போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.
மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று 11

## மாகாணசபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன எழுச்சிபெறுமாம்!

கொழும்பு, மே 29
மாகாணசபைத் தேர்தலின் போது நாட்டின் அநேகமான சபைகளில் தமது கொடி பறக்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சிசபைகளுக்குரிய உறுப்பினர் 11

# வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு அவசியம்!

ஹக்கீம் வலியுறுத்து



**கொழும்பு, மே 29**
**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வுகள் அவசியம். இதைத்தான் உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு உணர்த்தியுள்ளன என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.** 11

## இரத்தவாந்தி எடுத்து ஒருவர் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், மே 29
பேருந்தில் பயணித்த குடும்பத்தலைவர் ஒருவர் திடீரென இரத்தவாந்தி எடுத்து உயிரிழந்துள்ளார். திருகோணமலைப் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் (வயது 48) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 11


மணல் கடத்திய

## மூன்று டிப்பர்கள் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், மே 29
வெளிமாவட்டத்தில் இருந்து முறையான அனுமதிப்பத்திரம் இல்லாமல் மணல் ஏற்றிச்சென்ற மூன்று டிப்பர்கள் சங்குப்பிட்டிப்பாலத்தில் வைத்து பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளன. 11

## பஸ்ஸால் வீழ்ந்து இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், மே 29
பேருந்தில் பயணித்த இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.
அன்ரனி அருள்தாஸ் விதுராஜ் (வயது 26) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக் 11



முச்சந்தி முரளி

'அப்ப திரும்பவும் எல்லாரும் மாஸ்க் அணிந்த மாணிக்கங்களாக மாறோணுமோ?'




## உணவு ஒவ்வாமையால் 21 மாணவர்கள் பாதிப்பு!

விசுவமடுவில் சம்பவம்

முல்லைத்தீவு, மே 29
முல்லைத்தீவு – விசுவமடுப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் உணவு ஒவ்வாமை காரணமாக, 21 மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 11



வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின்

## அரசாங்கம் விரைவில் குப்பைத்தொட்டிக்குள்!

கொழும்பு, மே 29
ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தியில் உள்ளனர். எனவே, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் இந்த ஆட்சியாளர்களும் விரைவில் குப்பை தொட்டிக்குள்தான் செல்ல நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான அஜித் பி பெரேரா எச்சரித்துள்ளார்.
இது தொடர்பில் 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4085 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 17 23 26 72 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1152 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 04 27 48 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0111 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 2 7 8 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2191 |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 17 40 65 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5843 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 9 5 9 1 2 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1873 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 09 15 44 80 |
| விசேட எழுத்து | J |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0418 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 9 1 2 0 |

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0551 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 4 2 6 7 9 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 28.05.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2817 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 37 46 48 68 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 26.05.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 10 18 56 79 |
| வெற்றி வாரம் | 4978 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 26.05.2025 |
| தினம் | புதன்கிழமை |
| மேஷம் | ♈ |
| வெற்றி இலக்கம் | 24 56 57 58 |
| சீட்டிழுப்பு வாரம் | 4529 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 26.05.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கம் | 42 56 57 59 |
| வெற்றி வாரம் | 1993 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 26.05.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 03 25 27 59 |
| வெற்றி வாரம் | 2643 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 26.05.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 07 30 33 68 |
| வெற்றி வாரம் | 2130 |

# நிகழ்நிலை காப்புச்சட்டம் திருத்தங்களுடன் நடைமுறை

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 29**

**நிகழ்நிலை காப்புச்சட்டம் என்பது காலத்தின் தேவையாகும். அதில் ஏற்கனவே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் தொடர்பில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதே எமது எதிர்பார்ப்பாகும். தற்போதிருப்பது முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டம் அல்ல. சுமார் 38 திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு அவற்றை உள்ளடக்கிய சட்ட வரைவுதற்போது காணப்படுகிறது. அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தக்குழுநியமிக்கப்பட்டுள்ளது. அதற்காக போதுமானளவு கால அவகாசமும் அரசாங்கத்தால் வழங்கப்படும். திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளின் போது ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சமூக வலைத்தளங்களால் பாதிக்கப்படுவோர், தனிப்பட்ட நபர்கள்மீது அவதூறு பரப்புதல் எனப் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வாக நிகழ்நிலை காப்புச்சட்டம் அமையும் - என்றார். (எ-இ)

# சீனி மோசடியைப் போன்றே உப்பு விடயத்திலும் மோசடி!

## முஜிபுர் றஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 29

கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தில் நடைபெற்ற சீனி மோசடி போன்று தற்போது உப்பு மோசடி நடைபெறுகின்றது. 24 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் உப்புக்கு 40 ரூபா வரி அறவிடப்படுகின்றது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உப்புத் தட்டுப்பாடு ஏற்படவுள்ளமை தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னரே அரசாங்கம் அறிந்திருந்தது. மழை காரணமாக உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது என்று கூறப்படுவது பொய்யாகும். தமது இயலாமையை மறைப்பதற்கு இயற்கையின்மீதும் பழிசுமத்துகின்றனர்.

இந்தியாவிலிருந்து ஒரு மெற்றிக்தொன் உப்பு 80 டொலருக்கு இறக்குமதிசெய்யப்பட்டது. அவ்வாறெனில் ஒரு கிலோ உப்பு இலங்கை விலைப்படி 24 ரூபாவாகும். ஆனால் ஒரு கிலோ உப்புக்கு 40 ரூபா இறக்குமதி வரி அறவிடப்படுகிறது.

போக்குவரத்து உள்ளிட்ட செலவுகளை உள்ளடக்கினாலும் ஒரு கிலோ உப்பினை ஆகக் குறைந்தது 100 ரூபாவுக்கு வழங்கமுடியும். ஆனால் சந்தைகளில் 350 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்படுகிறது.

கடந்த அரசாங்கத்தில் முட்டைத் தட்டுப்பாடு ஏற்பட்டு அதன் விலை 80 ரூபாவாக அதிகரித்த போது, அரசாங்கம் முட்டையை இறக்குமதி செய்து 35 ரூபாவுக்கு வழங்கியது. அத்தியாவசிய பொருள்களுக்கு வற்வரியை நீக்குவோம் என்று கூறிய அரசாங்கம் இன்று இறக்குமதி செலவைவிட அதிக வரியை அறவிடுகிறது - என்றார். (எ-இ)

# தே.ம.சக்தி விஸ்தரிப்பு

கொழும்பு, மே 29

பிரதமர் பதவியில் மாற்றம் வராது. தேசிய மக்கள் சக்தி மேலும் விஸ்தரிக்கப்படும் என அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்குள் மோதல் மூண்டுள்ளது எனத் தகவல்கள் பரப்பப்பட்டுவரும் நிலையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். எதிரணி என்றால் எதையாவது கூறவேண்டும் என்பதற்காகவே இப்படியான கதைகள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. அவை அப்பட்டமான பொய்யாகும். தேசிய மக்கள் சக்தி மேலும் விஸ்த ரிக்கப்படும். உள்ளாட்சிசபைத் தேர்தல் அதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது- என்றார். (ச-44)

# மக்கள் விரட்டுகின்ற நிலைமை தற்போதைய அரசுக்கு ஏற்படாது

## அமைச்சர் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

கொழும்பு, மே 29

ஆட்சியை முன்னெடுக்க எமக்கு முடியாவிட்டால் மக்கள் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும்வரை காத்திருக்கமாட்டோம். நாமாகவே விலகிச் சென்றுவிடுவோம். ஆனால் அவ்வாறானதொரு நிலை ஏற்படாது. ஏனெனில் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றோம்.

இவ்வாறு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சில வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நியாயமான காலம் அவசியம். அந்தக் காலப்பகுதிக்குள் பொருளாதாரம், அரசியல், சமூகம், கல்வி, வறுமை ஒழிப்பு என்பன தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தத் தவறினால் மக்கள் எம்மை நீக்கலாம். அதற்குரிய தார்மீக உரிமை மக்களுக்கு உள்ளது.

ஆனால் எமக்கு முடியாவிட்டால் மக்கள் விரட்டும்வரை காத்திருக்கமாட்டோம். நாமாகவே சென்றுவிடுவோம். பதவிகளை இறுகப்பிடித்துக் கொண்டிருக்கவேண்டிய தேவைப்பாடு எமக்குக் கிடையாது.

மக்களுக்காக திருப்தியுடன் செயற்படுகின்றோம். திட்டங்களை உருவாக்கி வருகின்றோம். எமது உறுப்பினர்கள் கற்றுக்கொண்டே வேலை செய்கின்றனர். புதியவர்களாக இருந்தாலும் அனுபவங்களைப் பெற்றுச் சேவையாற்றுவதில் தீவிரம்காட்டி வருகின்றனர் - என்றார். (எ-44)



# வினைத்திறனற்றதாக ரயில் திணைக்களம்

கொழும்பு, மே 29

புகையிரதத் திணைக்களம் வினைத்திறனற்றதாகக் காணப்படுகிறது என போக்குவரத்துப் பிரதியமைச்சர் பிரசன்ன குணசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புகையிரதத் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்பி புகையிரதசேவை அட்டவணையைத் தயாரித்து மக்களுக்கு தரமான சேவையை வழங்குங்கள். இல்லாவிட்டால் வீடு செல்லுங்கள்- என்றார். (ச-41-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்க பொறிமுறையை ஏற்படுத்தத் திட்டம்

**கொழும்பு, மே 29**

**சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் கூடிய பல்துறைசார் பொறிமுறையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

துஷ்பிரயோகங்கள் மற்றும் அனைத்துவித வன்முறைகள் தொடர்பாக 24 மணிநேர முறைப்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய வசதிகளை தேசிய பாதுகாப்பு அதிகாரசபை வழங்கியுள்ளது. ஆயினும், முறையானவகையில் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களும் அதிகளவில் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் துரிதமாக தலையிட்டு செயற்படுவதற்கு இயலுமான வகையில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளரின் தலைமையில் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கூடி தேசிய மட்டக் குழுவொன்றை நியமிப்பதற்கும், சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற உடலியல் ரீதியான தண்டனைகளை இல்லாதொழிப்பதற்கு இயலுமான வகையில் தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் வழக்குக் கோவையை துரிதமாக திருத்தம் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக அறிக்கையிடும் போது பாதிக்கப்பட்ட சிறார்கள் மீண்டும் மீண்டும் பாதிப்புக்குள்ளாவதைத் தடுப்பதற்குப் பொருத்தமான ஏற்பாடுகளை உட்சேர்த்து, தற்போது வரைவாக்கம் செய்யப்படுகின்ற ஊடக ஒழுக்கநெறிக் கோவையை துரிதமாக வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)




சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது. பூனையளுக்கே இப்பிடி மூளை இருக்கேக்க ஆறறிவு இருக்கிற மனிசர் மட்டும் எத்தினை தரம் சூடுபட்டாலும் திருந்திற பிளான் இல்லை. ஆர் என்ன ஆசைகாட்டினாலும் அதை நம்பி மோசம் போறதே எங்கட ஆக்களுக்கு பொழுதுபோக்கா மாறிட்டுது. நேற்றைக்கு செய்வினை எண்டு பயப்பிடுத்தி, அந்தப் பயத்தை வைச்சு தங்கட பொக்கெற்றை நிரப்பிற கும்பலைப் பற்றிச் சொல்லேக்க, 'ஓடிபி' நம்பரை வாங்கி தட்டிச்சுத்திற ஆக்களைப் பற்றியும் பட்சி சொல்லியிருந்ததெல்லோ. அப்பிடி 'ஓபிடி' நம்பரை வாங்கி ஏமாத்திட்டாங்கள் எண்டு இப்ப முறைப்பாடுகள் கூடிக்கொண்டே போகுது. முன்னப்பின்ன தெரியாதவை போனில கதைச்சு 'பரிசு விழுந்திருக்கு, காசு வந்திருக்கு, எக்கவுண்ட் செக் பண்ணப்போறம்' எண்டு ஒவ்வொருவிதமாக் கதைச்சு உங்கட 'ஓபிடி' நம்பரைக் கேட்டால் குடுக்கவேண்டாம் எண்டு பொலிஸும், மீடியாக்காரரும் படிச்சுப் படிச்சு சொன்னாலும் ஒருத்தரும் கேக்கிற மாதிரி இல்லை. அதால ஏமாந்துகொண்டே இருக்கினம்.

இந்த 'ஓடிபி' நம்பர் எண்டால் என்ன எண்டே தெரியாத ஆக்களும் இருக்கினம். அவைக்காக அதைப்பற்றிச் சின்ன விளக்கம். எங்கட எக்கவுண்டில இருந்து ஒன்லைனில காசு எடுக்கிறதெண்டால் கண்டபடி எடுக்கேலாது. அதை நீங்கள்தான் எடுக்கிறீங்கள் எண்டதை உறுதிப்படுத்த உங்களுக்கு, நீங்கள் கணக்கு வைச்சிருக்கிற வங்கிக்காரர் ஒரு ரகசிய இலக்கம் ஒண்டு அனுப்பினம். அந்த ரகசிய இலக்கத்தைதான் 'ஓடிபி' நம்பர் எண்டுறவை. இந்த ஓடிபி நம்பர் ஒருக்காத்தான் பாவிக்கலாம். இன்னொருக்கா காசு எடுக்கோணும் எண்டா இன்னொரு நம்பரை வங்கிக்காரர் அனுப்பினம். காசு எடுக்கிறதுக்கு மட்டும்தான் 'ஓபிடி' நம்பர் தேவை எண்டில்லை. பேர் மாத்திறது, உங்கட எக்கவுண்டின்ர பாஸ்வேட் மாத்திறது இதுகளுக்கும் 'ஓபிடி' நம்பர் தேவை. உதாரணமா கர்ணன்ர கவசகுண்டலம் மாதிரித்தான் உந்த 'ஓடிபி' நம்பர். அது எங்களிட்ட இருக்கும் வரைக்கும் எங்கட எக்கவுண்ட ஆரும் தொடேலாது. ஆனால் கண்ணனுக்கு கர்ணன் கவசகுண்டலத்தை தானமாக் குடுத்தமாதிரி நாங்களும் ஆரும் போனில கதைக்கேக்க உந்த 'ஓடிபி' நம்பரைக் குடுத்தமோ, அவ்வளவுதான். கவசமில்லாத கர்ணனை அம்புகள் துளைச்சமாதிரி, எங்கட எக்கவுண்டையும் துளைச்சு எடுத்து, வழிச்சுத் துடைச்சுக்கொண்டு போடுவாங்கள்.

இதைப்பற்றி நல்லாத் தெரிஞ்ச, படிச்சவைகூட 'காசு வந்திருக்குது' எண்டவுடன வாயைப் பிளக்கிறதாலதான் இவ்வளவு சில்லெடுப்பும். அவையின்ர 'ஓடிபி' நம்பரை ஈஸியா வாங்கி, அவையின்ர எக்கவுண்டை தங்கட கட்டுப்பாட்டுக்க கொண்டந்து, அதில இருக்கிற காசை அப்பிடியே சுளையா விழுங்கிற விளையாட்டு யாழ்ப்பாணப் பக்கம் கூடிக்கொண்டே போகுது. பகிடி என்னெண்டால் அறப்படிச்ச பல்லியே கூழ்ப்பானைக்குள்ள விழுந்தமாதிரி மீடியாக்காரர் சிலரும் இப்பிடி ஏமாந்து, காசைப் பறிகுடுத்திருக்கினமாம். அந்தளவுக்கு எல்லாரும் ஏமாறுறதில நான் முந்தி, நீ முந்தி எண்டு முண்டியடிக்கினமாம். இனியாவது கொஞ்சம் பக்குவமாக, தெரியாத ஆக்களுக்கு உந்த 'ஓடிபி' நம்பரைக் குடுக்காமல் நீங்கள் மட்டும் அதை தங்கமலை ரகசியம் மாதிரி பாதுகாத்தால்தான் உங்கட காசும் பத்திரமா இருக்கும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

# சீரற்ற காலநிலையால் 400 குடும்பங்கள் பாதிப்பு

அண்மைய நாள்களில் நாடு முழுவதும் நிலவிய மோசமான காலநிலை காரணமாக எட்டு மாவட்டங்களில் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அனர்த்த முகாமைத்துவநிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம், யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, கொழும்பு, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் மொத்தம் 1,520 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 8 பேர் காயமடைந்துள்ளனர். 325 வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# எனது பாதுகாப்புக்கு துப்பாக்கி தாருங்கள்

*அர்ச்சுனா எம்.பி. கோரிக்கை*

*சஜித் எதிர்ப்பு*

கொழும்பு, மே 29

தனக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு வசதிகள் இல்லையெனில், தனக்கான பாதுகாப்பை உறுதிசெய்ய துப்பாக்கி வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா அரசிடம் முன்மொழிந்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பில் எதிர்த்தரப்புக் கட்சித் தலைவர்கள் சிலர் சபாநாயகரைச் சந்தித்து தமது பாதுகாப்புத் தொடர்பான சிக்கல்களை முன்வைப்பதற்கான கலந்துரையாடல் இடம்பெற்றபோதே அர்ச்சுனா எம்.பி. இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். இதன்போது எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உயர்ந்த ஜனநாயகப் பண்பு

களைக் கொண்ட நாடொன்றில் பாதுகாப்புக்காக துப்பாக்கிகள் வழங்கப்படக்கூடாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் ஒவ்வொரு நபர்களினதும் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்போது பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, தமக்குப் பாதுகாப்புத்தேவை எனக்கோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை தேசிய பாதுகாப்பு சபையின் பரிசீலனைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார். (ச-இ)


# குற்றவியல் சட்டத்தில் புதிய திருத்தம் செய்க

கொழும்பு, மே 29

குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குற்றமிழைத்தவர்களையோ, சந்தேகநபர்களையோ திரும்பத்திரும்ப கேள்வி கேட்பதன் மூலம் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இதனால் அவர்கள் உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர். எனவே இத்தகைய உளரீதியான பாதிப்புகளிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென மருத்துவர் சருணி கொஹோம்பங்கே கோரிக்கை விடுத்துள்ளார். (ச-25, 6)

# வர்த்தக உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம்



இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான மென்மையான இருதரப்பு வர்த்தக மேம்படுத்தலுக்கான செயற்பாட்டுக்குழுவை நிறுவுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இருதரப்பு வர்த்தகத்தில் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத சாத்தியங்களை திறந்துவிடுதல், வர்த்தகம் சார்ந்த சவால்களுக்கு முகங்கொடுத்தல் மற்றும் இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான வர்த்தக வீச்செல்லையை அதிகரித்தல் மற்றும் தரத்தை மேம்படுத்துதல் ஆகிவற்றைக் குறிக்கோளாகக்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை கைத்தொழில், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மக்கள் சீன வாணிப அமைச்சு ஆகியவற்றுக்கிடையிலான கைத்தொழில் வழங்கல் சங்கிலிகளின் பொருளாதார ஒத்துழைப்பை பலப்படுத்துதல் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் அந்தோனியார் ஆலய 175 ஆவது ஆண்டு யூபிலி பெருவிழா

யாழ்ப்பாணம், மே 29

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் 175 ஆவது ஆண்டு யூபிலி பெருவிழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

4 ஆம் திகதி புதன்கிழமை முதல் நவநாள் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு நடைபெறும். 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.15 மணிக்கு முதலாம் திருப்பலியும், 6.30 மணிக்கு யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் பெருநாள் திருப்பலியும் நடைபெறும். அன்றைய தினம் மாலை புனிதரின் தேர்ப்பவனி இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)



யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் புதிய கட்டடத் தொகுதித் திறப்பு விழா நேற்றுப் புதன்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள சமாச வளாகத்தில் சமாசத்தின் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் இடம்பெற்றது. (ச-25. 17.66)

# மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 02 . 1945

மறைவு 28 . 05 . 2025

## திருமதி குணரத்தினம் கமலாம்பிகை

விடத்தற்பளையை பிறப்பிடமாகவும் பளை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் கமலாம்பிகை நேற்று (28.05.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற குணரத்தினம் (இளைப்பாறிய உப தபால் அதிபர், கனகராயன் குளம்) அவர்களின் அன்பு மனைவியும், குணரூபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், நகரசபை சாவகச்சேரி), குணதர்சனா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம், யாழ்ப்பாணம்), குணவித்யா (மருந்தாளர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், மலர் விழி (ஆசிரியை, மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்), கர்ணன் (SPHI - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கரவெட்டி), முருகதாஸ் (மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற மகாலிங்கம் (முன்னாள் சிராப்பர் சுங்கத் திணைக்களம்) மற்றும் சிவபாக்கியம் (கனடா, முன்னாள் மருந்தாளர் தேசிய வைத்தியசாலை கொழும்பு), தங்கேஸ்வரி (கனடா ஓய்வு பெற்ற வருமானவரி உத்தியோகத்தர் கொழும்பு), ஞானேஸ்வரி (முன்னாள் உத்தியோகத்தர் பரந்தன் இரசாயனப் பொருள் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற சாந்தநாயகி (காலநடை அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் சச்சிதானந்தசிவம் (சுவிஸ்), விஜயகுமாரி (கனடா முன்னாள் ஆசிரியை, முழங்காவில் ம.வி ), காசிநாதன் (லண்டன்), ருக்மனி (கனடா), ஆகியோரின் சகோதரியும் மலர் (கனடா - ஓய்வுபெற்ற பிரதம எழுதுநர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பளை), காலஞ்சென்ற கதிர்காமநாதன் (கனடா), மற்றும் நவயோகராஜா (ஓய்வு பெற்ற சாரதி, மீன்பிடி திணைக்களம்) தயாபரி (சுவிஸ்), சிவானந்தம் (கனடா), Dr. சியாமளா (லண்டன்), பாலசுப்பிரமணியம் (கனடா), ஆகியோரின் மைத்துனியும், சிவாம்சா (மாணவி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), சாந்தித்யன் (மாணவன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி), ஆதிகா (மருத்துவபீட மாணவி, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), தியானா (மாணவி வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), தணிகா (மாணவி வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குடும்பத்தினர்.

077 [illegible], 077 [illegible]

077 739 3889

இல 695/2 நாவலர்வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(CR/45221) D*

# வருடாந்தத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 29

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்தத் திருவிழா, எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று அன்று இரவு 7 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறும். 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெற்று அன்று மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம். ஒரு சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** சகோதரர்கள் பணம்கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்செலுத்தவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. அக்கம்பக்கத்தில் இருப்பவர் களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால்,குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச்செல்வது நல்லது.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்துவிடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடிவது மகிழ்ச்சிதரும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். மற்றவர்களுக்குக் கொடுத்துவராமல் இருந்த கடன் திரும்பக் கிடைக்கக்கூடும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம்தேவைப்படும். தந்தைவழி உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். மாலையில் வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மீனம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் முடிவடையும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொரு நாளும் வித்தியாசமான ஒன்று. ஒவ்வொரு நாளையும் ஒரேமாதிரியாக பார்த்தால் நீங்கள் குருடரே.


– பௌலோ கொய்லோ –

## வெற்றி யாருக்குச் சொந்தம்?

எதிரியின் படைகள் நகரைச் சுற்றிவளைத்திருந்தன. மண்ணின் இருப்பை உறுதிப்படுத்துவதற்காகத் தன் படைகளைக் களமிறக்கியிருந்தான் மன்னன். வியூகங்கள் வகுக்கப்பட்டன. எதிர்ப்புப் பலமாக்கப்பட்டது. எதிரி பின்வாங்கினான். இதையொரு பெரிய 'போர் வெற்றியாக' கருதி கொண்டாடத் தொடங்கின படைகள். இப்போது பிரச்சினையை எதிரியிடம் இருந்தல்லாமல், சொந்தப் படைகளிடம் இருந்தே மன்னன் எதிர்கொள்ள ஆரம்பித்தான். 'எதிரி பின்வாங்கியமைக்குக் காரணம் நாம்தான்' என்று ஒரு தளபதியின் தலைமையிலான படைகள் கூறின. 'இல்லை எம்மால்தான் இது சாத்தியம்' என்று இன்னொரு தளபதியின் தலைமையிலான படைகள் கூறின. சொந்தப்படைகளுக்குள் போர் வலுப்பெற்றது. இரண்டு படைகளும் ஒன்றுடன் ஒன்றுமோதி அழிந்துபோயின. இப்போது எதிரிக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. இரத்தமும் இல்லாமல் யுத்தமும் இல்லாமல் ஆக்கிரமிப்பு கனகச்சிதமாக நிகழ்ந்தது. இப்போது ஏனிந்தக் கதை? காரணம் இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பில் மார்ச் மாதம் 28ஆம் திகதியன்று வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலைத் திரும்பப் பெறுவதாகக் கூறியுள்ளது அரசாங்கம். இந்த அறிவிப்பு வெளிவந்ததும், அதையொரு வெற்றியாகக்கருதி அதற்கான உரிமைக் கோரிக்கையைத் தமிழ்த் தரப்புகள் முன்வைக்கத் தலைப்பட்டுள்ளன. இது சமூகவலைத்தளங்களில் பெரும் விவாதப் பொருளாகவும் மாறியுள்ளமை அவதானிப்பு. வர்த்தமானி அறிவித்தல் திரும்பப் பெறப்பட்டமை வரவேற்கத்தக்க விடயம்தான். இதற்காக சட்டரீதியாகப் பணியாற்றியவர்களும், தூதரகங்கள் தூதரகங்களாக ஏறி இறங்கியவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்தான். ஆனால், இதில் கொண்டாடவும் குதூகலிக்கவும் ஒன்றுமில்லை.

உண்மையைச் சொல்வதாயின், தமிழ்த் தேசியத்தின் இருப்பை வெளிப்படுத்துவதற்கான எங்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு இந்த வர்த்தமானி விவகாரம் ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. ஒரு கை தட்டுவதால் ஒருபோதும் ஓசை எழாது. எனவே, தையிட்டி திஸ்ஸ விகாரை, குருந்தூர் மலை விவகாரம், அரசியற்கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என அனைத்து விடயங்களிலும் சட்டரீதியான நகர்வுகளாலும், சர்வதேசத்தை நாடிய நகர்வுகளாலும் நாங்கள் எமக்கான தீர்வுகளை அடைந்து கொள்ளமுடியும். அதைவிடுத்து, ஒரு வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற்றமைக்காக வெளிப்படுத்தப்படும் கருத்துகளும், அதன் பின்னாலுள்ள கேலிகளும், கிண்டல்களும் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டியவை. இந்தப் பிரிவினையும், தொலைநோக்கற்ற சிந்தனைகளும்தான் தமிழ்த் தேசியத்தின் பெரும் சாபக்கேடு. ஆனால், அதைப் புரிந்தும் - அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை அறிந்தும், தமது அபிமானிகளையும், கட்சியினரையும், தொண்டர்களையும் உரிய ஆற்றுப்படுத்தல்கள் மூலம் தலைமைகள் ஒழுங்கமைக்காமல் இருப்பது பெரும் அபத்தம். இப்போதெல்லாம் சிங்கள பௌத்த பேரினவாதம் வேட்டையாடிப் பலகாலம். ஏனெனில் நாமாகத் தேடிச்சென்று அதன் வலைக்குள் வீழ்ந்து இரையாகிக்கொண்டிக்கின்றோம். படைகளுக்குள் சண்டை வந்தால் எதிர்ப்பே இல்லாமல் நிலம் பறிபோகும் என்ற புரிதல் தமிழ்த் தேசியத் தரப்புகளுக்கு இன்று அவசியம் தேவை.






## ஆபத்தான கிறீம்கள் விற்பனை


### நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை

கொழும்பு, மே 29

இலங்கை சந்தையில் கிடைக்கும் பல தோல் கிறீம்கள் மற்றும் லோஷன்களில் ஆபத்தான அளவில் அதிக அளவு கன உலோகங்கள் இருப்பது ஆய்வக சோதனைகளில் தெரியவந்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சோதனை செய்யப்பட்ட தயாரிப்புகள் கன உலோகங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்புகளை மீறி, நுகர்வோருக்கு கடுமையான உடல்நல அபாயங்களை ஏற்படுத்துகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு வரம்புகளை மீறும் கிறீம்கள் மற்றும் லோஷன்களை வாங்கவோ பயன்படுத்தவோ கூடாது. இந்தத் தயாரிப்புகளை விற்பனைசெய்யும் விற்பனையாளர்களுக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## கொரோனா; இலங்கையில் 'அலேர்ட்'

கொழும்பு, மே 29

உலகெங்கிலும் பல நாடுகளில் மீண்டும் பரவிவரும் புதிய கொரோனா வைரஸ் குறித்து தற்போது கவனம் செலுத்தப்பட்டுவருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொரோனா சிங்கப்பூர் மற்றும் இந்தியாவில் சில எண்ணிக்கையில் பதிவாகியுள்ளது. நாங்கள் அதை உன்னிப்பாகக் கவனித்துவருகிறோம். கடந்த காலத்தில் நடந்தது போன்ற அனர்த்தம் குறித்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## அஸ்வெசும விநியோகம்

கொழும்பு, மே 29

அஸ்வெசும சலுகைகளைப் பெறும் குடும்பங்களில் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு நேற்று முதல் அவர்களின் அஸ்வெசும வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதுஎன்று நலன்புரி சலுகைகள் சபை தெரிவித்துள்ளது.

பயனாளிகள் தங்கள் நிதியை அவர்களின் கணக்குகள்மூலம்அணுக முடியும் என்று சபைத் தலைவர் ஜெயந்த வீஜரத்ன தெரிவித்தார். (ச-இ)

## ரூபா வீழ்ச்சி

கொழும்பு, மே 29

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்றுமுன்தினம் மேலும் குறைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணயமாற்று விவரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 295.44 ரூபாவாகவும், 303.92 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. ச-இ)

## யூரியா இறக்குமதி

கொழும்பு, மே 29

அடுத்த பருவத்துக்கான 15 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, எஞ்சிய போகங்களுக்கு திறந்த சந்தையில், நேரடி மற்றும் கலப்பு உரமாக விற்பனைசெய்வதற்காகப் போட்டி விலை மனுக்கோரல் பொறிமுறையைக் கடைப்பிடிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை

வெள்ளிக்கிழமை- வைகாசி 16

30.05.2025


சுபநேரம் : 07.22- 08.52

ராகுகாலம் : 01.22 - 02.52


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செந்தில் தொண்டமானுடன் பிரிட்டன் தூதுவர் சந்திப்பு

கொழும்பு, மே 29

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பெட்ரிக்குக்கும், இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு வெஸ்ட்மின்ஸ்டர் மாளிகையில் அண்மையில் இடம்பெற்றது.

பெருந்தோட்டத் துறையின் தற்போதைய நிலைமை, இந்திய வம்சாவளித் தமிழர்களின் வரலாற்று இடம்பெயர்வு, சமகால அரசியல் போக்கு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ச-25,125)

# உறவுகளுக்கான நீதியில் கண்துடைப்புச் செய்யாதீர்!

## வடக்கு – கிழக்கு காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் தெரிவிப்பு

அம்பாறை, மே 29

**வடக்கு, கிழக்கில் காணாமாலாக்கப்பட்ட உறவுகளுக்கு இதுவரை நீதி நிலைநாட்டப்படவில்லை. இந்தநிலையில் இலங்கையில் இடம்பெறவுள்ள கூட்டத்தொடர் ஒன்றுக்காக இலங்கைக்கு வருகைதரவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், காணாமலாக்கபட்ட உறவுகளுக்கு நீதியைப் பெற்றுத்தரும் நோக்கில் வரவேண்டும். இல்லையெனில் கண்துடைப்புக்காக இலங்கைக்கு வருகைதரவேண்டாம் என்று அம்பாறை மாவட்ட வலிந்து காணாமாலாக்கபட்ட உறவுகள் சங்கத்தின் தலைவியும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமாலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் செயலாளருமான செல்வராணி தெரிவித்துள்ளார்.**

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் உறவுகளுக்கான நீதியைக்கோரி முன்னெடுக்கப்படும் மாவட்டம் தழுவிய போராட்டம் சங்கத்தின் முன்றலில் அமைந்துள்ள மத்திய சந்தை வளாகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதனை நீதியாக வெளிப்படுத்த வேண்டி போராடிவருகின்றோம். நாம் எதிர்பார்த்த நீதி கிடைக்காத பட்சத்தில் இன்று சர்வதேசம் வரை இந்த நீதிக்கான குரல் ஓங்கி ஒலித்து நிற்கின்றது. இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறைமீது எங்களுக்கு சிறுதுளிகூட நம்பிக்கை இல்லை. ஆகவேதான் நாம் சர்வதேசப் பொறிமுறையை நாடிநிற்கின்றோம். ஐக்கிய நாடுகள் பிரதிநிதி(செயலாளர் நாயகம் ) இலங்கைக்கு வரவுள்ளார். இலங்கைக்கு நீங்கள் வருவது என்றால் எமக்கான தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு வாருங்கள். இலங்கை அரசின் மாயமான கதைகளை நம்பி எமக்கான நீதியை மறுதலிக்கக் கூடாது- என்றார். (ச-125)

# 450 கிலோகிராம் போதைப்பொருளுடன் 11 மீனவர்கள் கைது


கொழும்பு, மே 29

இலங்கையின் தெற்கு கடற்கரை ஆழ்கடலில் சுமார் 450 கிலோகிராம் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய 11 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் இணைந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய சோதனை நடவடிக்கையிலேயே இந்தச் சட்டவிரோதச் செயல் முறியடிக்கப்பட்டது.

சந்தேகநபர்களிடமிருந்து 450 கிலோகிராம் ஐஸ் மற்றும் ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள்களுடன் பலநாள் மீன்பிடிப்படகுகள் இரண்டும் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மாத்தறை, தேவேந்திரமுனைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ச-125)



# பனைத் திருவிழா

யாழ்ப்பாணம், மு 29

வட மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் ஏற்பாட்டில், பனைத் திருவிழா யாழ்.முற்றவெளிபண்ணைசுற்றுவட்டத்தில் நாளை வெள்ளிக்கிழமையும், நாளைமறுதினம் சனிக்கிழமையும் மு.ப. 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது. (ச-25)



மன்னார் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயப் பங்கின்கீழ் இயங்கும் மூன்று முன்பள்ளிப் பாடசாலைகளில் ஒன்றான புனித மரியாள் பாடசாலை முன்பள்ளி சிறுவர் பூங்கா பேசாலையைச் சேர்ந்தவரும் ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் யூகே மன்னார் நலன்புரி அமைப்பின் பொருளாளருமான தேவசகாயம் கில்மனின் நன்கொடை நிதியத்தில் புனரமைக்கப்பட்டு சிறுவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்றது. (ச-41-60)

# தெங்கு முக்கோணத் திட்டத்தில் மானியமாக தென்னங்கன்றுகள்!

யாழ்ப்பாணம், மே 29

தென்னை முக்கோணத்திட்டத்தின்கீழ் புதுநடுகைத்திட்டம் மற்றும் வீட்டுத்தோட்டத்திட்டம் என்பவற்றினூடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு 6 இலட்சத்து 96 ஆயிரத்து 320 தென்னம்பிள்ளைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதில் புதுநடுகைத்திட்டத்தின்கீழ் கால் ஏக்கருக்கு மேற்பட்டதும் 50 ஏக்கருக்கு உட்பட்டதுமான காணிகளுக்கு 4 இலட்சத்து 17ஆயிரத்து 792 தென்னம்பிள்ளைகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டமானது தனியார்காணிகள் (காணியின் உறுதி அல்லது பெமிற்றினது போட்டோ பிரதி அல்லது கிராம சேவையாளாரால் உறுதிப்படுத்திய பிரதேச செயலரால் சான்றுபடுத்தப்பட்ட ஆவணங்கள் கட்டாயமானது) அரச நிறுவனங்களின் காணிகள், வணக்கஸ்தலங்கள் போன்றவற்றுக்கும் பொருந்தும்.

வீட்டுத்தோட்டத்திட்டம் என்ற திட்டத்தின்கீழ் 1 - 15 வரையிலான தென்னம்பிள்ளைகள் (சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்ட வகையில்) சமுர்த்திப் பயனாளிகள், பாடசாலை மாணவர்கள். அரசபணியாளார்கள், விளையாட்டுக்கழகங்கள், அறக்கொடை நிலையங்கள், இளைஞர் கழகங்கள், மாதர் சங்கங்கள் என்பவற்றுக்கு 2 இலட்சத்து 78 ஆயிரத்து 528 தென்னம்பிள்ளைகள் வழங்கப்படவுள்ளன.

நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கால் ஏக்கர் தொடக்கம் 50 ஏக்கர் வரையிலான இவ்வருடம் ஜனவரி தொடக்கம் டிசம்பர் மாதம் வரை புதுநடுகைத்திட்டத்தின் கீழ் தென்னம்பிள்ளைகள் எடுத்த அல்லது எடுக்கவுள்ள பயனாளிகளுக்கு குழாய் நீர்ப்பாசனம் அல்லது தூவல் நீர்ப்பாசனம் அல்லது சொட்டு நீர்ப்பாசனம் செய்திருந்தால் ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபா மானியத்தொகை வழங்கப்படவுள்ளது.

பசளை மானியத்திட்டத்தின் கீழ் கால் ஏக்கர் தொடக்கம் 5 ஏக்கர் வரையிலான காய்க்கும் மரங்கள் உள்ள தென்னம்பிள்ளைகளுக்கு ஏ.பி.எம். பசளையானது அரைமானிய விலையில் ஒரு அந்தர் (50கிலோ) ரூ.4,000க்கு வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களினை அறிந்து கொள்வதற்கும் தேவையான விண்ணப்பப் படிவங்களினை பெற்றுக் கொள்வதற்கும் தென்னைச்செய்கையில் ஆர்வமுள்ளவர்கள் தங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள கமநல சேவை நிலையங்களிலுள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களினையோ அல்லது பளை பிரதேசத்திலுள்ள பிராந்திய காரியாலயத்தின் 0212284501 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்புகளை மேற்கொண்டு உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருணோதயா சனசமூக நிலையமும் அருணோதயா இயல் இசை நாடக மன்றமும் இணைந்து நடத்திய "மதிப்பளிப்பு விழாவும் கலைநிகழ்வும் 2025" கடந்த ஞாயிற்றுக்கிழமை அருணோதயா அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், க. பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள், 2024ஆம் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் மற்றும் எல்லேப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள், பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிபெற்ற மாணவர்கள், கலைஞர்கள், கல்வி முன்னேற்றக்கழக ஆசிரியர்கள் மற்றும் அனலைதீவு மண்ணிலே சிறந்த சமூக சேவையினை வழங்கிய சமூக சேவையாளர்கள், சமூக மட்ட அமைப்பினர் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-33-9)



## தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள் வவு.வில் சத்தியப்பிரமாணம்!

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வவுனியாவிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வவுனியாக் குடியிருப்பில் அமைந்துள்ள வன்னி பிளாசா விடுதியில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது வவுனியாவில் உள்ள 5 உள்ளூராட்சி மன்றங்களிலும் தேசியமக்கள் சக்தியில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள் மற்றும் விகிதாசார உறுப்பினர்கள் கலந்துகொண்டு தமது சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டனர். கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் தேசியமக்கள் சக்திக்கு வவுனியாவில் உள்ள சபைகளில் 26 ஆசனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

**பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் - 2025**

யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

காலம் : 01.06.2025

நேரம் : பி.ப 03.30 மணி

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலாளர்**
**பழைய மாணவர் சங்கம்**
**யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்**

**வல்வை முதியோர் இல்லம் பெண் பராமரிப்பாளர் தேவை**

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி
**077 810 6857, 075 974 2495, 021 226 5551**
www.valvaieldershome.com

(CS/58405) J-1

**மணிவிழா வாழ்த்துக்கள்**

**திரு குமாரவேலு பஞ்சலிங்கம்**

**பகுதித்தலைவர் (உயர்தரம்)**
**யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி**



__கல்வி__

விஞ்ஞான மானி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) பட்டப்பின் கல்வி டிப்ளோமா - (NIE) பட்டப்பின் டிப்ளோமா (IT for Edu) - மொறட்டுவ பல்கலைக் கழகம்)

__சேவைக்காலம்__

03.01.1992 - 26.06.2011 வரை
பது/ பசறை தமிழ் மகா வித்தியாலயம்
27.06.2011 - 18.05.2025 வரை
யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி

**இவரது 33 வருட ஆசிரியப் பணியைப் பாராட்டி அவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய வாழ்த்துகின்றோம்.**

*வாழ்த்துவோர்:*
**ஆசிரியர் நட்புறவுக் கழகம்**
**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

## கேள்வி அறிவித்தல்
## துணுக்காய் பிரதேச சபை

பிரதேச சபை கடைத் தொகுதிகளை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல். துணுக்காய் பிரதேச சபையின் மல்லாவி பிரதான வீதியில் உள்ளூர் அபிவிருத்தித் உதவித் திட்ட நிதியில் (LDSP) அமைக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை 01.07.2025ம் திகதி முதல் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

கேள்விப் படிவம் வழங்கப்படும் காலம் 29.05.2025 - 11.06.2025 பி.ப.3.00 மணிவரை
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 12.06.2025 பி.ப.2.00
கேள்விப் படிவம் திறக்கப்படும் திகதி:- 12.06.2025 பி.ப.2.00மணி
கேள்வி திறக்கப்படும் இடம்:- துணுக்காய் பிரதேச சபை தலைமை அலுவலகம்

குத்தகைக்கு வுழங்கப்படவுள்ள கடைகள் விபரம்

| கடை இல. | ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா. (வரி நீங்களாக) | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா. (வரி நீங்களாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா. | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 10 | 3960000.00 | 3000.00 | 59400.00 | 16500.00 |
| 11 | 3960000.00 | 3000.00 | 59400.00 | 16500.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பம் பெற வரும் போது தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது செல்லுபடியான கடவுச் சீட்டு மற்றும் அதன் பிரதியுடன் வர வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை "செயலாளர், துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்" எனும் முகவரிக்கும் இணைப் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ 12.06.2025ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேச சபையின் அறை வாடகைக் கடைகளை நீண்டகாலக் குத்தகைக்குப் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. குறித்த கடையின் ஒப்பந்தகாரர்கள் எந்த வகையிலும் உப வாடகைக்கு வழங்கவோ,உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
6. நீண்டகாலக் குத்தகைக் கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும்.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் அபாயகரமான தொழில்கள் ஆகிய தொழில்களை மேற்கொள்ள முடியாது.
8. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் மூன்று மாத கால வாடகைப் பணத்தை பாதுகாப்பு வைப்பாக ஒரு வார காலத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொளவதுடன் சபையுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் தாமாகவே இதிலிருந்து விலகியதாகக் கருதி அடுத்த கேள்வி தாரருக்கு குறித்த நிலையம் வழங்கப்படும்.
9. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**கேள்விச் சபை**
**துணுக்காய் பிரதேச சபை**
**29.05.2025**

(CR/45220) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். பழைய பூங்கா மேம்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 29

பழைய பூங்கா வளாகத்தினை மேம்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் பழைய பூங்கா வளாகத்தில் இனிவரும் காலத்தில் எந்தத் திணைக்களத்துக்கும் காணி வழங்குவதில்லை என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் பழைய பூங்கா வளாகத்துக்கான நம்பிக்கைநிதியம் உருவாக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வளாகத்திலுள்ள திணைக்களங்களிலிருந்து காணிக்கான விலைமதிப்பீட்டுக்கமைய வாடகை அறவிடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. பழைய பூங்கா வளாகத்தி ல் அமைந்துள்ள பழைய கச்சேரியின் பாதுகாப்புக் கருதி வேலி அமைப்பது தொடர்பாகவும், புனரமைப்பது தொடர்பாகவும் தொல்லியல் திணைக்களத்துக்கு அறிவிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பழைய பூங்கா வளாகத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பராமரிப்புத் தொடர்பாக யாழ்.மாவட்டப் பதில் செயலர் தலைமையில் நேரடி ஆய்வு இடம்பெற்றது. (ச-66)

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 08 . 1937



மறைவு
25 . 05 . 2025

### சண்முகநாதன் நாகரத்தினம்

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வதிவிடமாகவும், கனடா Montreal ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் நாகரத்தினம் அவர்கள் 25-05-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், சிறிதரன், சிறிரஞ்சனி, மனோகரன், கலாரஞ்சனி ஆகியோரின் அன்புத் தாயாரும், சங்கரலிங்கம், சுகந்தன், செல்வமீனாட்சி, தர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தனிநாயகம், தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாருகேசி, ஷான், ரஃபேல், லியோன், சார்ம், சாருகன், சாத்விகா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2025) வியாழக்கிழமை 55 Rue Gince. Saint-Laurent, QC H4N 1J7 Aeterna funeral Complex இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


சிறீதரன் (மகன்) - +33 769 860 915
மனோகரன் (மகன்) - +15 144 159 955
ஜெ. பகீரதன் (மகன்) - 077 071 9731

தகவல் :
ஜெ. பகீரதன்
மல்லாவி

(CR/45219) J-1

## நீங்கா நினைவில் ஏழு ஆண்டுகள்

கண்மடல்
30 . 10 . 1985



மண் நெகிழ
18 . 05 . 2018

### அமரர் கோபாலபிள்ளை குகன்

(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - அதிசிறப்புத்தரம்)

திதி: திருதியை (29.05.2025)

எப்படியடா மறக்கமுடியும்?
அந்தக் கொடிய நாளை எண்ணி
இதயம் குமுறுதே !
ஊரறியாமலே உண்மைகள்
ஊமையாய் உறங்கிட
அன்னை மடியகன்று ஆண்டுகள் ஏழு ஆனதுவோ?
அழகிய உன் கூடு
ஒளிஇழந்து தவிக்கிறது
நீயில்லா எம்மனையில்
நின்மதி கிடைக்குமா..?
விண்ணிலிருந்து கண்திறந்து பாரடா
பூநகரி மண்ணிலே நடந்ததுயர் கூறடா?
ஆண்டுகள் ஆயிரம் கடந்தாலும்
ஆறிடுமோ உந்தன் பிரிவுத்துயர்
இம்மண்ணில் மீண்டும் வந்து புன்னகைப்பாயா?

நடராஜர் வீதி,
வேலணை மேற்கு, வேலணை - 08.
தற்காலிக முகவரி:
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(CS/58408) J-1

உந்தன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 03 . 1929



மறைவு
26 . 05 . 2025

### கணபதிப்பிள்ளை பாக்கியம் (பேபி ரீச்சர்)

(முன்னாள் ஆசிரியர் - வீரசிங்கம் மகாவித்தியாலயம் - மீசாலை,
அரசினர் தமிழ் கலவன் பாடசாலை - குஞ்சுப்பரந்தன், இந்துக்கல்லூரி - சாவகச்சேரி)

யாழ் மீசாலை புத்தூர்சந்தியை பிறப்பிடமாகவும் , குஞ்சுப்பரந்தன், பெரியமாவடி, சங்கத்தானை, கொழும்பு (கல்கிசை) இறுதியாக கெருடாவிலை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பாக்கியம் அவர்கள் கடந்த (26.05.2025) திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - தெய்வானப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் (குஞ்சுப்பரந்தன் தபாலதிபர்) அன்பு மனைவியும், உமாதேவன், மகாதேவன், வாமதேவன் (சிவா,பாபு), கிருஷ்ணதேவி, உமாதேவி, தர்மதேவி (பாப்பா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சத்தியபாமா, றஞ்சினிதேவி (றஞ்சி ), சிவகோசலா (சாந்தி), ரவீந்திரன் (ரவி), மகாதேவா, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, நல்லம்மா, சிவக்கொழுந்து, மனோன்மணி ஆகியோரின் அன்பு சகோதரியும், சிவபாக்கியம் (நோர்வே) அவர்களின் அன்பு மைத்துனியும், உமாதினி, நர்மதா, அபர்ணா, அஜந்தன், விதுர்ஷன், நிலான், ஸ்ரீபன், யோன், பபித்திரா, மொனிஜா, ஜவாகர் ஆகியோரின் பேத்தியும், ஆத்தியாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (29.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் கெருடவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கெருடாவில்,
சாவகச்சேரி.

(CR/45219) J-1

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் அமைச்சரின் பதிவால் கடும் அதிருப்தியடைந்த ஈரான்!

தெஹ்ரான், மே 29



கேன்ஸ் திரைப்பட விழாவில் ஈரான் இயக்குநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட விருது தொடர்பாகப் பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் பதிவிட்டுள்ள பதிவு பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது.

பிரான்ஸின் கேன்ஸ் நகரில் கேன்ஸ் திரைப்பட விழா கடந்த 13ஆம் திகதி ஆரம்பமாகி 10 நாள்கள் நடைபெற்றது.

அதன் இறுதியில் சிறந்த இயக்குநருக்கான விருது ஈரானிய திரைப்பட இயக்குநர் ஜாபர் பனாஹிக்கு வழங்கப்பட்டது.

ஈரான் திரைப்பட இயக்குநர் ஒருவர் கேன்ஸ் திரைப்பட விழாவின்உயரியவிருதைப்பெறுவதுஇதுவேமுதன்முறையாகும்.

ஈரான் இயக்குநருக்கு விருது வழங்கப்பட்டமை ஒரு விபத்து என்று பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் தனது சமூக வலைத்தளக் கணக்கில் பதிவிட்டுள்ளார். அவரின் இந்தக் கருத்தால் ஈரான் கடும் அதிருப்தியடைந்துள்ளது. ஈரானுக்கான பிரான்ஸ் தூதுவரை அழைத்துக் கண்டனங்களையும் தெரிவித்துள்ளது. (ஏ-இ)



# 'ஸ்டார் ஷிப்' முயற்சியில் 'ஸ்பேஸ் எக்ஸ்' தோல்வி!

நியூயோர்க், மே 29

"ஸ்பேஸ் எக்ஸ்" நிறுவனத்தின் "ஸ்டார் ஷிப்" ரொக்கெட் ஏவும் 9ஆவது முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளது.

டெக்ஸாஸில் இருந்து ஏவப்பட்ட 30 நிமிடங்களுக்குள் ரொக்கெட் தொடர்பை இழந்துள்ளது.

இந்த ரொக்கெட் இந்தியப் பெருங்கடலில் வீழ்ந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

எரிபொருள் கசிவு காரணமாக ரொக்கெட் ஏவும் முயற்சி தோல்வியடைந்துள்ளது என்றும் கூறப்படும் நிலையில், அந்த நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் டொன் ஹவுட் அதை உறுதிப்படுத்தியுள்ளார். "ஸ்டார் ஷிப்" என்பது விண்வெளிப்பயணம், செயற்கைக்கோள் ஏவுதல் போன்ற பல்வேறு பணிகளுக்காக "ஸ்பேஸ் எக்ஸ்" நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ரொக்கெட் ஆகும். (ஏ-இ)








# ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணில் பணயக்கைதி!

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 29

ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் ஓரிரு நபர்களால் ரணில் விக்ரமசிங்க கட்சிக்குள் பணயக்கைதியாக இருக்கின்றார். ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தால் கொழும்பு மாநகரசபை ஆட்சியைக் கைப்பற்றியிருக்கலாம் என்று ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 55 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. தற்போது நடந்துமுடிந்த தேர்தலில் அந்தக் கட்சி 13 உறுப்பினர்களையே பெற்றுக்கொண்டுள்ளது.

வடகொழும்பில் 17 வட்டாரங்கள் இருக்கின்றன. அந்த 17 வட்டாரங்களையும் அன்று நாங்கள் வெற்றிபெற்றோம். ஐக்கிய தேசிய கட்சிக்குள் இருக்கும் பிரச்சினை காரணமாக கட்சியைச் சேர்ந்த பலர் வேறு கட்சிகளிலும் சுயாதீனக் குழுக்களிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கின்றனர். இதுகுறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவியை வகித்த பின்னர், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என அவர் தெரிவித்திருந்தார். இவ்வாறானநிலையில் கட்சியை ஒற்றுமைப்படுத்தி, கட்சியை மீண்டும் வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்ல அவர் முன்வந்து செயற்பட வேண்டும். ஆனால் இன்று அவர் கட்சிக்குள் பணயக்கைதியாக இருக்கிறார்- என்றார். (ஏ-இ)

# அரசின் இயலுமையை அறிய இடமளிக்கப்படவேண்டும்!

## ஐ.தே.க. எம்.பி. ஆசுமாரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 29

இந்த அரசாங்கத்தை தற்போதே வீழ்த்துவதற்கு முற்படக்கூடாது. அது பயணிப்பதற்கு இடமளிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

தனியார் தொலைகாட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் தொடர்பிலான எனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும். அரசாங்கத்தை விமர்சிப்பதற்கும், அதைக் கவிழ்ப்பதற்கும் தற்போதே முற்படக்கூடாது. அதற்கு இடமளிக்கப்படவேண்டும். 2025 வரவு - செலவுத் திட்டம் இறுதிபெறும் வரையிலாவது அரசாங்கம் பயணிப்பதற்கு இடமளிக்கவேண்டும். அப்போதுதான் ஆட்சியாளர்களின் இயலுமை என்னவென்பதும் தெரியவரும். 2026 ஜனவரிக்குப் பின்னர் பெரும் சவால் உள்ளது. ஆளுங்கட்சியில் உள்ள பலர் தாம் இன்னும் எதிரணி என நினைத்துக்கொண்டுள்ளனர். பாதீட்டில் 90 சதவீதமானவை நிறைவேற்றப்படும் பட்சத்தில்தான் அடுத்தக்கட்டத்தை நோக்கி தேசிய மக்கள் சக்தியால் பயணிக்க முடியும் -என்றார். (ஏ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 01 . 1929



மறைவு
28 . 05 . 2025

## திருமதி. பஞ்சலிங்கம் பூரணம் (பஞ்சுமாமி)

நீர்வேலியை பிறப்பிடமாகவும் நல்லூரை வளர்ப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பஞ்சலிங்கம் பூரணம் அவர்கள் (28-05-2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கத்தின் (பஞ்சு கடை-உரும்பிராய்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற விஜயகுமார், கிருஷ்ணகுமார் (கண்ணன்), ஶ்ரீக்குமார், கதிர்காமநாதன் (குகன்) மற்றும் மீனலோசனா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவமலர், புஷ்பமாலா, பிறேமா (பபி), சிவாஜினி (கீதா) மற்றும் ஆனந்தமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (29-05-2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பஞ்சுகடை,
ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல், குடும்பத்தினர்.

# ‘தீப்பந்தம்’ திரையிடல்

யாழ்ப்பாணம், மே 29

ஈழத்துக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட முழுநீளத் திரைப் படமான ‘தீப்பந்தம்’ நாளை வெள்ளிக்கிழமை இலங்கையின் பல இடங்களிலும் லண்டன், கனடா, சுவிஸ், நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளிலும், பெரிய திரைகளில் திரையிடப்பட வுள்ளது.

லண்டன் ஆம்லஸ் தயாரிப்பில், பிளக் போர்ட் இன்டர்நெஷனல் படக்குழுமத்தால், இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களை உள்வாங்கி இந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிளக் போர்ட் இன்டர்நெஷனல் படக்குழுமத்தால் எடுக்கப்பட்ட ‘டக் டிக் டொஸ்’, ‘புத்தி கெட்ட மனிதன்’ ஆகிய திரைப்படங்கள் ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வெற்றிகரமாக ஓடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

# வருடாந்த மஹோற்சவம்

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 5 ஆம் திகதி இரவு 7 மணிக்கு மஞ்சத்திருவிழாவும், 7 ஆம் திகதி இரவு 7 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், 8 ஆம் திகதி இரவு சப்பறத்திருவிழாவும், 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். 11 ஆம் திகதி இரவு 7 மணிக்கு பூங்காவனமும், 12 ஆம் திகதி இரவு 7 மணிக்கு வைரவர் உற்சவமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)

# மே 30,31 யாழ்ப்பாணத்தில் கனடா கல்விக் கண்காட்சி

இலங்கை கனடா வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் மிகப்பிரமாண்டமான முறையில் கனடா கல்விக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

குறித்த கண்காட்சி யாழ்ப்பாணம் வலம்புரி ஆடம்பர விருந்தினர் விடுதியில் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ளதாக குறித்த நிகழ்வின் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.


யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர்,

‘வடக்கு - கிழக்கின் இளைஞர்களை மேம்படுத்தல் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பல்’ என்ற தொனிப்பொருளில் நடை

பெறும் இந்தக் கண்காட்சியை இலங்கை வர்த்தகசபை, இலங்கை கனடா வணிக மன்றம், கனடா உயர்ஸ்தானிகராலயம், கனடா இலங்கை வணிக மன்றம் ஆகியன இணைந்து முன்னெடுக்கின்றன. இதில் பலதரப்பட்ட துறைசார் அதிகாரிகள் பங்கேற்கவுள்ளதுடன் துறைசார் கேள்விகளுக்கு விளக்கங்களும் வழங்கப்பட வுள்ளன.

இதில் வடக்கின் ஆளுநர் உள்ளிட்ட பலர் அதிதிகளாகவும் கலந்து பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர்- என்றனர். (ச-20)

# மரண அறிவித்தல்



தாயின் மடியில்
18.08.1930

இறைவன் அடியில்
28.05.2025

## அப்பாப்பிள்ளை வாசுதேவலிங்கம்

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை வாசுதேவலிங்கம் அவர்கள் நேற்று (28.05.2025) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை-வள்ளியம்மை தம்பதியின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம்-அமுதவல்லி தம்பதியின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (முன்னாள் எதிர்கட்சி தலைவர்), சொக்கலிங்கம் (சட்டத்தரணி) மற்றும் திகாம்பரலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற செந்தில்ராசன் மற்றும் அன்பரசி, முத்தழகன் (ஜேர்மனி), எழிலரசி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமஸ்கந்தராசா (கேமாஸ்ரோஸ்), ரஞ்சினி (ஜேர்மன்), ஞானசேகரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, ஞானேஸ்வரி மற்றும் ஞானாம்பிகை, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் புஸ்பலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேமலதா-Dr.சிவபாலன், மிர்தா-சிறிஸ்காந் (ஜேர்மன்), ரேகா-ரமணன், அமிர்தன், அபிரன், அச்சுதன் (ஜேர்மனி), வாகினி, அருண் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு பேரனும் பிருத்திகா, ஆத்மன், அனோஜன், சகானா, யக்சனா (ஜேர்மனி), வேதாந், யாத்வி ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.05.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
மகள்-077 659 5147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபால்த்...

சி.நிரோஷன தெரிவித்துள்ளார்.
ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் ஏற்படும் தாமதங்களை நிவர்த்திசெய்தல் உள்ளிட்ட 10 கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-இ)

## காற்றாலை...

மன்னார் மாவட்டத்தில் புதிதாக முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின்திட்டத்துக்கும், சட்டவிரோத மணல் அகழ்வுக்கும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நேற்றுக் கடும் எதிர்ப்புப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரனின் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலக மண்டபத்தில் நேற்றுக் காலை இந்தக் கூட்டம் நடைபெற்றது.
இதன்போது மாவட்ட அபிவிருத்தி சார்ந்த பல்வேறு விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் புதிதாக முன்னெடுக்கப்பட்டுவருகின்ற காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. இதன்போது, அந்தத் திட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்தனர்.
அத்துடன் சட்டவிரோத மணல் அகழ்வு, சட்டவிரோத கனிய மணல் ஆராய்ச்சி என்பவற்றுக்கும் கடுமையான கண்டனத்தைப் பொதுமக்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பதிவுசெய்தனர்.
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான், ரவிகரன், முத்து முஹம்மட், ஜெகதீஸ்வரன் ஆகியோர் இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். அத்துடன், திணைக்களத் தலைவர்கள், அரச ஸ்தாபனங்களின் தலைவர்கள், கடற்படையினர், பொலிஸார் ஆகியோரும் இதில் பங்கேற்றனர். (அ-ம)

## மாகாணசபைத்...

கள் நியமனம் இடம்பெற்றுவருகின்றது. அது முடிவடைந்த பின்னர் மாகாண சபையின் ஆதரவைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை ஆரம்பிப்போம்.
உப்புப் பிரச்சினை, போர்வீரர் நினைவு தின விவகாரம் என்பன வருவதற்கு முன்னரேயே 20 இலட்சம் வாக்குகளை அரசாங்கம் இழந்துவிட்டது. அடுத்த தேர்தலில் இதைவிடவும் பின்னடைவு ஏற்படும். மாகாணசபைத் தேர்தலில் வெற்றிநடை போடுவதற்குரிய வியூகத்தை நாமல் ராஜபக்சவின் தலைமையில் வகுத்துவருகின்றோம்-என்றார். (அ-ம-44)

## வடக்கு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கில் காணிகளைக் கைப்படுத்துவதற்கு அரசாங்கம் முற்பட்டது. இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலும் வெளியானது. இதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இவ்வாறு எதிர்ப்புகள் வலுத்ததால் பிரதமர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனால் ஏற்படும் அநீதிகளை நாம் சுட்டிக்காட்டினோம். அதனை ஏற்றுக்கொண்டு வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் மீளப்பெற்றுள்ளது. இது வரவேற்கக்கூடிய விடயம்.
ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின்போது வடக்கு, கிழக்கில் கிடைக்கப்பெற்ற வாக்குகளை விடவும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசாங்கம் பின்னடைவைச் சந்தித்துள்ளது. பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல் மூலம் தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதையே தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு உணர்த்தியுள்ளன - என்றார். (அ-ம-44)

## உணவு...

பாடசாலையில் வழங்கப்பட்ட உணவால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகவே, மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று முதற்கட்டத் தகவல்களின் அடிப்படையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் 10 பேர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.
குறித்த மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவின் மாதிரிகள் சுகாதாரப் பரிசோதகர்களால் பெறப்பட்டுள்ளன. அவை மேலதிக பகுப்பாய்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (அ-ம-113)

## அரசாங்கம்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உள்ளூராட்சிசபைகளில் கட்சி அல்லது சுயாதீனக்குழு அறுதிப்பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத பட்சத்தில், சபை கூடும் முதல் நாளில் பெரும்பாலானவர்களின் விருப்பத்துடன் தவிசாளர், நகரபிதா, உப நியமனங்கள் இடம்பெறும். இணக்கம் ஏற்படாவிட்டால் வாக்கெடுப்பு நடத்தப்படும். இதுதான் ஜனநாயக நடைமுறையாகும்.
ஆனால் தமக்கு 50 சதவீத ஆதரவு இல்லாத சபைகளிலும் ஆட்சியமைக்க இடமளிக்கவேண்டும் என ஆளுங்கட்சி வலியுறுத்துகின்றது. அதுதான் ஜனநாயகம் எனவும் பாடமெடுக்கப்படுகின்றது. நாட்டிலுள்ள சட்டம் தொடர்பில் ஆட்சியாளர்களுக்குத் தெளிவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது.
இந்த அரசாங்கம் மீது குறுகிய காலப்பகுதியிலேயே மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். அதனால்தான் 23 இலட்சம் வாக்குகளை ஆளுங்கட்சி இழந்துள்ளது. சுயாதீனக் குழுக்களுடன் ஆளுங்கட்சி பேச்சு நடத்தினால் அது ஜனநாயகமாம். நாம் பேச்சு நடத்தினால் ஜனநாயக விரோதச் செயலாம். இது எந்த வகையில் நியாயம்?
அரசாங்கம் மக்கள் ஆணையை மதிக்க வேண்டும், மக்கள் ஆணைக்குக் கட்டுப்படவேண்டும். அரசாங்கம் தனது பயணத்தை மாற்றியமைக்கவேண்டும் என்ற எச்சரிக்கையையே கடந்த தேர்தலில் மக்கள் வழங்கியுள்ளனர். அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் தமக்கு திருப்தி இல்லை என்பதையும் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் அரசாங்கம் குப்பைத் தொட்டிக்குள்தான் செல்லநேரிடும்-என்றார். (அ-ம-44)

## இரத்த...

உறவினர்களைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அவர், மீண்டும் திருகோணமலை நோக்கி பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தார், அப்போது பஸ் சாவகச்சேரியை அண்மித்தபோது அவர் திடீரென இரத்தவாந்தி எடுத்துள்ளார். இதையடுத்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## வங்காலைக்...

இடம்பெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:-
மன்னார் வங்காலைப் பகுதியில் கடலரிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. கடல்நீர் நகருக்குள் உட்புகுவதால் வங்காலையின் இருப்பு கேள்விக்கு உட்பட்டுள்ளது. வங்காலையில் ஒரு தடுப்பணையை அமைக்குமாறு அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாள்களாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். குறிப்பாக வங்காலை - முத்தரிப்புத்துறை அழிவின் விளிம்பில் உள்ளது. அந்தப் பகுதி மக்களும் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். ஆனால், முத்தரிப்புத்துறை கடற்படை முகாமுக்கு அருகில் தடுப்பணையொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு யார் நிதியொதுக்கீடு செய்தது? கடற்படையினரைப் பாதுகாக்க தடுப்பணை அமைக்க முடியுமென்றால், மக்களைப் பாதுகாக்க அமைக்க முடியாதா? - என்றார்.
இதையடுத்து மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:-
வங்காலையில் தடுப்பணை அமைப்பதற்கு 56 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. ஆனால், எமக்கு 23 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை முத்தரிப்புத்துறையில் கடற்படையினர் தடுப்பணை அமைப்பதற்கு எம்மால் நிதி ஒதுக்கீடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை - என்றார்.
ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் முடிவடைந்த பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கோரிக்கைக்கு இணங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலர், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் ஆகியோர் வங்காலைக்குச் சென்று அங்குள்ள நிலவரங்களைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-56-26)

## பஸ்ஸால்...

களப்புக்குச் சென்ற இ.போ.ச. பஸ்ஸின் மிதிபலகையில் நின்றவாறு குறித்த இளைஞர் கடந்த 23ஆம் திகதி பயணித்துள்ளார். பஸைப் பகுதியில் நிலைதடுமாறி கீழே வீழ்ந்துள்ளார். இதையடுத்து, அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## மூன்று...

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்பின்போதே இந்த டிப்பர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

# யாழ். பல்கலைக்கழகத்தால் விழிப்புணர்வு நடைபவனி



யாழ்ப்பாணம், மே 29
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடப் பழையமாணவர் சங்கமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வு நடைபவனி கடந்த ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியில் அமைந்துள்ள உயர்பட்டப் படிப்புகள் பீட முன்றலில் ஆரம்பமாகி இடம்பெற்றது.
நடைபவனி பலாலி வீதி ஊடாக, திருநெல்வேலி பரமேஸ்வரா வீதிச் சந்தி, சேர்.பொன்.இராமநாதன் வீதி ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதான நுழைவாயிலை அடைந்து பல்கலைக்கழக வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டன. பின்னர் நடைபவனி பிறவுண் வீதி ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை அடைந்து அங்கும் மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டன. தொடர்ந்து விழிப்புணர்வு நடைபவனி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடத்தில் நிறைவுபெற்றது. (ச-33-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவைநோக்கிச் செல்கின்றது மன்னார்த் தீவு


## விற்பனைக்கு



நல்ல நிலையிலுள்ள ஹைஏஸ்ரக வாகனம் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 077 1209992



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 27 பரப்பு காணி விற்பனைக்குண்டு 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன். வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம் செம்மண் காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி

ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு - 076 739 0413
077 623 4204


மன்னார், மே 29

**மன்னார்த்தீவு வேகமாக அழிவுநிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டுவருகிறது. அதற்கு அதிகாரிகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பல தொழில் நிறுவனங்களும் முன்நின்று செயற்பட்டுவருகின்றன. இதற்கு மக்கள் ஒருபோதும் துணை நிற்கக்கூடாது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.**

மன்னார் பிரஜைகள் குழுவில் கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் எவ்வித அனுமதியும் இன்றி கனியமணல் அகழ்வு நடவடிக்கை மற்றும் காற்றாலை மின்னுற்பத்தி நடவடிக்கைகள் என்பன முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. குறித்த நடவடிக்கைகளுக்காக மக்களினுடைய காணிகள் சட்டவிரோதமாக அபகரிக்கப்படுவதையும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் செயற்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் மக்களினுடைய வாழ்வாதாரமும், எதிர்காலமும் பாதிக்கப்படும் என சூழலியலாளர்களால் எச்சரிக்கப்படுகின்றது. எனினும் மக்களின் எதிர்காலப் பிரச்சினைகளை உள்வாங்காமல், அரச திணைக்களங்களின் ஆதரவுடன் பல நிறுவனங்கள் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டுவருகின்றன.

குறித்த நிறுவனங்கள் பலரை பணம்கொடுத்து வாங்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகப் போராட முன்வரவேண்டும்- என்றார். (ச-33-56)


## பிரத்தியேக வகுப்புகள்

Biology
Agriculture Science - AL
Science

தொடர்புகளுக்கு :
077 597 2153



## உணவகத்திற்கு ஆட்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. உணவு பரிமாறுபவர், ரொட்டி தயாரிப்பாளர், சமையல் உதவியாளர், ரொட்டி, ரைஸ் தயாரிப்பவர், துப்பரவு பணியாளர் தகுந்த சம்பளம் வழங்கப்படும். உணவு வழங்கப்படும்.

தொடர்பு: 078 663 0740



## காணி விற்பனைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் 1 3/4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு

தொடர்பு : 071 555 1963


## நீங்கா நினைவுடன் ஓராண்டு!

மலர்வு
10 . 08 . 1938



உதிர்வு
29 . 05 . 2024

### அமரர் கனகேஸ்வரி நடராசா
(கனகேஸ் ரீச்சர்)

தமிழ் பண்டிதை, English Special Trained, முன்னை நாள் ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

ஆசை அம்மாவே அருவமாய்ப் போனாயோ
விடுதலை பெற்று நீ விண் மீனாய்ப் போனாயோ
பாசத்தின் ஊற்றே எம் நினைவாகிப் போனாயோ
மீண்டும் இணைந்திடுவோம் கதையல்லக் கண்மணியே!

'திருவேளகம்'
ஆசிரியர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
10 . 05 . 1962



ஆண்டவர் மடியில்
26 . 05 . 2025

### திருமதி சதானந்தன் பிறிச்ஜெற் பிறிம்றோஸ் (சசி)

குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சதானந்தன் பிறிச்ஜெற் பிறிம்றோஸ் அவர்கள் கடந்த (26.05.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்-விக்ரோறியா தம்பதியின் பாசமிகு மகளும் தவமணிதேவியின் பெறாமகளும் காலஞ்சென்ற வேலு மற்றும் இராஜாம்பாள் தம்பதியின் பாசமிகு மருமகளும் வேலு சதானந்தன் அவர்களின் அன்பு மனைவியும் நிலக்ஷன், அருண்சன், அன்ரனி (அவுஸ்திரேலியா), அன்றூ (அவுஸ்திரேலியா), கிறிஸ்ரீனா, அருள்நேசன் ஆகியோரின் பாசமிகு தாயும் வெஷி (அவுஸ்திரேலியா), டிவானி, தர்ஷன் ஆகியோரின் அன்பு மாமியும் மோசேஸ் (நோர்வே), சுரேஸ் (பின்லாந்து), விஜி, சுலக்ஷன் (தொழிலதிபர்), சுதர்ஷன், கனுசியா (மலேசியா), அனுஷா, தனுஷா (அமெரிக்கா), மதுஷன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மேபிள் (நோர்வே), கொன்செப்ரா (பின்லாந்து), ஜெஸ்மின், கிறிஸ்ரி, நிலக்ஷி, முஸ்தா, சரண்ராஜ், சாந்தகுமார், செல்வகுமார், உதயகுமார், சந்திரகுமார், நந்தகுமார், விஜயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் அஞ்சலினா (அவுஸ்திரேலியா), அலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (29.05.2025) வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

18/8, மத்திய கிழக்கு வீதி,
குருநகர்.
யாழ்ப்பாணம்.

தகவல்: (தம்பி)
சுலக்ஷன் குடும்பத்தினர்.
077 691 8095

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.